සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**11 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

බුද්ධ ධර්මය I, II
பௌத்தம் I, II
Buddhism I, II

02.12.2019 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## பௌத்தம் I

**கவனிக்க :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
* **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** சித்தார்த்த போதிசத்துவர் 'உண்மையைத் தேடும்' வேளை (சத்திய கவேசிவ) அவரை எதிர்கொண்ட எட்டு ஸமாபத்திகளையுமடைந்த சந்நியாசியின் பெயர் யாது?
(1) பக்கவ (2) காலதேவல (3) ஆலாரகாலாம (4) உத்தகராமபுத்த

**2.** "ஆனந்தரே! இந்த ரஜகஹ நகரம் உள்ளத்தைத் தொடுவதாயுள்ளது. அத்துடன் நிக்ரோத என்னும் கவர்ச்சியுடையது. சோரபிரபாத எனும் மகிழ்வுக்குரியது" எனும் இந்தக் கூற்றுகள் கூறப்படுவதாவது,
(1) மழைக்கால வாழ்விடம் பற்றியதாகும்.
(2) சுற்றாடலின் அழகினை மதிப்பீட்டிற்கு உட்படுத்திய இடம் பற்றியதாகும்.
(3) நடந்துகொண்டு தியானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட இடம் பற்றியதாகும்.
(4) ஆசையைத் தூண்டும் இடம் பற்றியதாகும்.

**3.** மட்டகுண்டலீ, ரஜ்ஜுமாலா போன்றவர்களுக்கு உதவியதன் மூலம் வெளிப்படுவது, புத்தரிடத்து நிலவிய,
(1) நோயுற்றவர்களுக்கு உதவும் இயல்பாகும்.
(2) அநாதைகளுக்கு உதவும் இயல்பாகும்.
(3) பொறுமையாயிருக்கும் இயல்பாகும்.
(4) நடுக்கமுறாத (அகம்பய) இயல்பாகும்.

**4.** புத்தரின் உருவச்சிறப்பினைக் கண்டு அவரைப் பின்பற்றுவதில் நாட்டம் கொண்ட பிக்கு யார்?
(1) வண. அனுருத்த (2) வண. ஆனந்த
(3) வண. தம்மராம (4) வண. வக்கலீ

**5.** "ரஹஸத் பவ் னொகொட - கெலெஸரயனுத் துரு கொட" இக்கவிதையின் இரண்டு அடிகளும் புத்தரிடத்து நிலவிய எந்த புத்த குணங்கள் பற்றிக் கூறுகின்றன?
(1) ஸம்மா ஸம்புத்த (2) அரஹங்
(3) லோகவிது (4) ஸுகத

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**6.** நிர்வாண நிலையை உணர்வதற்கு வேண்டிய பயிற்சிகளை நிறைவேற்றும் சங்கமாவது,
(1) ஸுபடிபன்னவாகும். (2) உஜுபடிபன்னவாகும்.
(3) ஞாயபடிபன்னவாகும். (4) ஸாமீசிபடிபன்னவாகும்.

**7.** "தானங் ஸீலங் பரிச்சாகங்" எனும் செய்யுளில் குறிப்பிடப்படும் சமய விடயங்களை அடையாளப்படுத்தும் பொதுப்பெயர் யாது?
(1) தஸ ராஜ தர்ம (2) தஸ பாரமிதா
(3) தஸ புண்ய க்ரியா (4) தஸ குஸல்

**8.** எந்தவொரு நபரும் பொருளிடத்திலோ நிகழ்விலோ அதிகம் விருப்பமோ வெறுப்போ இல்லாது சமநிலைப்பட்ட மனதைக் கொண்டிருத்தலை வெளிப்படுத்துவது
(1) உபேக்ஷா பாரமிதா (2) மைத்திரீ பாரமிதா
(3) க்ஷாந்தி பாரமிதா (4) அதிஷ்டான பாரமிதா

**9.** புத்தர் கிஜ்ஜகுட மலையின் ஸுகரகத குகையில் உபதேசித்த சூத்திரம்
(1) அம்பட்ட சூத்திரம் (2) மஹா ஸீஹநாத சூத்திரம்
(3) வேதனா பரிக்ரஹ சூத்திரம் (4) சோணதண்ட சூத்திரம்

**10.** ஸிகாலோவாத சூத்திரத்தில் காட்டப்பட்டுள்ளதன்படி ஆசிரியர் மாணவர்களுக்கு செய்யவேண்டிய கடமைகளுள் ஒன்று **அல்லாதது**
(1) சரியான ஒழுக்கமுறையில் நிலைப்படுத்தல்
(2) சரியான முறையில் கற்பித்தல்
(3) தனது நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தல்
(4) பாவங்களிலிருந்து விலக்குதல்

**11.** அறவழியில் சம்பாதித்த செல்வத்தை எவ்வாறு நுகரவேண்டுமென விபரிக்கும் புத்தரின் 'பத்தகம்ம சூத்திரம்' போதிக்கப்பட்டது
(1) உக்க பெரியாருக்கு (செட்டிக்கு) (2) அனேபிண்டு பெரியாருக்கு (செட்டிக்கு)
(3) கோசல மன்னனுக்கு (4) உபாசிகை விசாகாவுக்கு

**12.** பத்தகம்ம சூத்திரத்தில் வரும் பலி சங்கல்பத்தில் வரும் "தேவதா பலி" என்பதன் அர்த்தமாவது,
(1) கடவுளைக் குறித்து சத்துவ பிலி பூஜை நிகழ்த்துவது அவசியமானது என்பதாகும்.
(2) கடவுளினால் பிராணி படைக்கப்படுவது என்பதாகும்.
(3) பிலி பூஜைக்காக தேவதையை இணைத்துக்கொள்வது என்பதாகும்.
(4) சமய செயற்பாடுகளை நிகழ்த்துமிடத்து தேவதைக்கு புண்ணியத்தைக் கொடுத்தல் வேண்டும் என்பதாகும்.

**13.** ஆசிரியர்கள் கூறுவதனை காது கொடுத்துக் கேட்பதனாலும் புத்தகங்களை வாசிப்பதனாலும் அறிவை வளர்த்துக் கொள்வதனை புத்த சமயத்தில் அழைக்கும் முறை,
(1) சிந்தாமய ப்ரக்ஞா எனப்படும். (2) ஸுதமய ப்ரக்ஞா எனப்படும்.
(3) பாவனாமய ப்ரக்ஞா எனப்படும். (4) இந்திரியமய ப்ரக்ஞா எனப்படும்.

**14.** சம்சாரம் எனப்படும் கடலைத் தாண்டுவதற்கு உதவுவதாகவும் விதைக்கப்படவேண்டிய விதையொன்றாகவும் காட்டப்பட்டுள்ள நிர்வாண வழியில் நுழைவதற்கு மூலமாக விளங்கும் தர்ம விடயம்
(1) பக்தி (2) ஸத்தா (3) தபஸ (4) ஒத்தப்ப

**15.** தான் பெறும் வருமானத்திற்கு ஏற்றவாறு செலவு செய்தல் வேண்டும் என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டு வரவுசெலவினை நடாத்திச் செல்வதனை வ்யக்கபஜ்ஜ சூத்திரத்தில் காட்டப்படுவது
(1) உட்டான சம்பதா (2) ஆரக்க சம்பதா
(3) கல்யாணமித்ததா (4) ஸமஜ்விகதா

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**16.** தோன்றாத அகுசலங்களை தடுத்தல், தோன்றிய அகுசலங்களை அழித்தல், தோன்றாத குசலங்களைத் தோற்றுவித்தல், தோன்றிய குசலங்ளை மேலும் வளர்த்துக்கொள்ளல் ஆகிய நான்கு வித செயன்முறைகளில் ஈடுபடல், சீரிய அஷ்டாங்கிக (எட்டுவகை) வழிகளுள் உள்ளடங்குவது எந்த வழிமுறையிலாகும்?

(1) ஸம்மா வாச்சா (2) ஸம்மா கம்மந்த
(3) ஸம்மா ஆஜீவ (4) ஸம்மா வாயாம

**17.** மங்கல, பராபவ சூத்திரங்களில் குறிப்பிடப்படும் தர்ம உபதேசங்களின் மூலம் வெளிப்படுத்தப்படும் கருத்தினை உள்ளடக்கியுள்ள மிகப் பொருத்தமான கூற்றினைத் தெரிவுசெய்க.

(1) சிந்திப்பதற்கும் விசாரிப்பதற்கும் உதவுதல்
(2) கடமைகளை நிறைவேற்றவேண்டிய சமூகக் குழுக்களைக் காட்டுதல்
(3) சரியான பணம் சம்பாதித்தலுக்கான வழிமுறைகளைக் கற்பித்தல்
(4) இகலோகம், பரலோகம் இரண்டினதும் வளர்ச்சிக்கும் அழிவிற்கும் ஏதுவான விடயங்களை எடுத்துக் காட்டுதல்

**18.** புத்தர், தோதெய்யபுத்த ஸுபமானவருக்குப் போதித்தபடி நீண்ட ஆயுளுடன் கூடிய பிறப்பைப் பெறுவதற்கு ஒருவருக்கு காரணமாகும் காரணியாவது,

(1) மற்றவர்களின் சுகத்தைக் கண்டு பொறாமைப்படாதிருத்தல்
(2) உயிர்க்கொலை செய்யாதிருத்தல்
(3) வெறுப்படையாதிருத்தல்
(4) கர்வம் அடையாதிருத்தல்

**19.** நிர்வாண வழியை உள்ளடக்கும் பஞ்சநிவாரன தர்மங்களுள் 'வ்யாபாத'வை உவமையாகக் கொண்டிருப்பது,

(1) பாசி படிந்த நீருக்காகும்
(2) கலங்கிக் கொண்டு போகும் நீருக்காகும்
(3) மண் கலந்து செல்லும் நீருக்காகும்
(4) சூடாகிக் கொதிக்கும்போது குமிழிகள் எழும் நீருக்காகும்

**20.** உள்ளம், உடல் இரண்டிலும் எப்போதும் நிலவும் தூக்கம், சோம்பல் குணமானது நீவரண தர்மமாகும். அது,

(1) காமச்சந்த எனப்படும். (2) தீனமித்த எனப்படும்.
(3) உத்தச்ச குக்குச்ச எனப்படும். (4) விசிகிச்சா எனப்படும்.

**21.** பாவனாவில் (தியானத்தில்) ஈடுபடும் ஒருவர் அமர்ந்திருத்தல், நிற்றல், நடத்தல் முதலான நிலைகளை சுய விழிப்புணர்வுடன் செய்யவேண்டும். இது தம்மவில் (சமயத்தில்),

(1) இந்திரிய சம்வர எனப்படும். (2) ஸதி ஸம்பஜக்ஞ எனப்படும்.
(3) வேதனானுபஸ்ஸனா எனப்படும். (4) காயானுபஸ்ஸனா எனப்படும்.

**22.** ஸமத பாவனாவை விருத்திசெய்வதன் மூலம் உலகியல் வாழ்க்கைக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகளுக்கு **உரியதல்லாத** விடயம் யாது?

(1) லோபம் முதலான கிலேசங்களை (மாசுகளை) அடக்குதல்
(2) அமைதியின்மையைப் போக்கி சந்தோஷமான தோற்றத்தை ஏற்படுத்துதல்
(3) மனதை அலையவிடாது ஒருமுகப்படுத்துவதற்கு உதவுதல்
(4) த்ரிலக்ஷணம் பற்றி நன்கு அறிந்து உணர்ந்துகொள்ள முடியுமாயிருத்தல்

**23.** "நான் சம்புத்தனாயுள்ளேன், நான் மிக உயர்ந்த ரணசிகிச்சை செய்யும் வைத்தியராயுமுள்ளேன்", என்று புத்தபகவான் கூறிய கூற்றின் மூலம் வெளிப்படுவதாவது அவர்,

(1) உடல்ரீதியான நோய்களுக்கு சிகிச்சை செய்தார் என்பதாகும்.
(2) ரண சிகிச்சை செய்தார் என்பதாகும்.
(3) மனரீதியான நோய்களைக் குணப்படுத்துவதற்கு வழிகாட்டினார் என்பதாகும்
(4) நோயாளியை பக்கத்திலிருந்து கவனித்தார் என்பதாகும்.

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**24.** "நான் எனது இளமைக் காலத்தில் தம்மவை பின்பற்றவுமில்லை, பணத்தைச் சம்பாதிக்கவுமில்லை" என்றிவ்வாறு பச்சாதாபப்படுவதற்கு (வருத்தப்படுவதற்கு)க் காரணமாக அமைவதைக் காட்டும் தம்மபத காதாவின் முதல் இரண்டு அடிகள் எவை?
(1) "அக்கோச்ஜி மங் அவதி மங் - அஜினி மங் அஹாஸிமே"
(2) "தங்ச கம்மங் கதங் ஸாது - யங் கத்வா நானுதப்பதி"
(3) "அச்சரித்வா ப்ரஹ்மசரியங் - அலத்தா யொப்பனே தனங்"
(4) "ஸுஜீவங் அஹிரிகேன - காகசூரனே தங்ஸினா"

**25.** ஐம்புலன்களின் மூலம் கிடைக்கும் சுகங்கள் பற்றிய கெட்ட நினைவுகளிலிருந்து விடுபடுதல், மற்றையோரைக் கொல்லாதிருத்தல், மற்றவர்களுக்கு துன்பம் செய்யாதிருத்தல் போன்ற எண்ணங்களைக் (சங்கல்ப்பங்களைக்) கொண்டிருத்தல்,
(1) ஸம்மா திட்டீ எனப்படும். (2) ஸம்மா சங்கப்ப எனப்படும்.
(3) ஸம்மா கம்மந்த எனப்படும். (4) ஸம்மா ஆஜிவ எனப்படும்.

**26.** "ப்ரதிஸந்தி சித்தத்தினைக் காரணமாகக் கொண்டு பஞ்ச ஸ்கந்தம் (ஐந்தின் கூட்டம்) ஏற்படும்". என்று குறிப்பிடும் அனுலோம படிச்ச ஸமுப்பாத போதனையாவது,
(1) "அவிஜ்ஜா பச்சயா ஸங்காரா" என்பதாகும்.
(2) "ஸங்காரர பச்சயா விஞ்ஞாணம்" என்பதாகும்.
(3) "விஞ்ஞாண பச்சயா நாமரூபங்" என்பதாகும்.
(4) "நாமரூப பச்சயா ஸலாதனங்" என்பதாகும்.

**27.** மங்கல சூத்திரத்தில் "அனவஜ்ஜானி கம்மானி" எனும் அடியின் மூலம் கூறப்படும் சரியான ஜீவனோபாயத் தொழில்களைச் **சாராதது**
(1) விவசாயம் (2) கால்நடை வளர்ப்பு
(3) கால்நடை வியாபாரம் (4) அரசசேவை

**28.** "தூரங்கமங் ஏகசரங் - அஸரீரங் குஹாஸயங்" எனும் தம்மபத செய்யுளின் (காதா) மூலம் குறிப்பிடப்படுவது
(1) உள்ளத்தின் இயல்பு (2) உடலின் இயல்பு
(3) ஸங்ஸார தர்மங்களின் இயல்பு (4) ரூப தர்மங்களின் இயல்பு

**29.** "காலாமர்களே, இந்த தர்மத்தினை பூரணப்படுத்திய, பின்பற்றிய ஒருவருக்கு ஒரு காலத்தில் இந்த தர்மம் பயனற்றது என்று விளக்கம் ஏற்படுமாயின் அப்போது அதனைக் கைவிட வேண்டும்".இந்தக் கூற்றினால் வெளிப்படுத்தப்பட்டிருப்பது புத்த சமயத்தில் வரும்,
(1) ஆராய்ந்தறிய வேண்டும் என்ற நிலையிலாகும்.
(2) உண்மை நிரம்பிய நிலையிலாகும்.
(3) கொள்கை நிலையிலாகும்.
(4) தந்திரமான நிலையிலாகும்.

**30.** தஸ அகுஸல செயற்பாடுகளில் மனோ கர்மத்திற்குரியதான அகுஸலங்களைக் கொண்டிருக்கும் தெரிவு எது?
(1) ப்ராணகாத, அதத்தா தான, காமமித்யாசார
(2) ப்ராணகாத, அதத்தா தான, முஸாவாத
(3) பிஸுணா வாசா, பருஸாவாசா, ஸம்பப்பலாபா
(4) அபித்யா, வ்யாபாத, மித்யாத்ருஷ்டி

**31.** "மனமுவந்து அன்பான இயல்புடன் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுத்தல்" இது தஸ ராஸ தர்மங்களுள்
(1) சீலம் எனப்படும். (2) நேர்மை எனப்படும்.
(3) மென்மை எனப்படும். (4) தபஸ எனப்படும்.

**32.** "கியனுவ திவாரய - கெரெம் புதுகுண அலங்கார" என்ற பெயருடன் கூடிய பெறுமதிமிக்க செய்யுள் திரட்டினை ஆக்கியவர்
(1) வண. தொடகமுவே ராகுலர் (2) வண. வீதாகம மைத்ரீய
(3) வண. மயுரபாத பிரிவெண்பதி (4) வண. வலிவிட சரணங்கர

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

**33.** இரண்டாம், மூன்றாம் தேரவாத பௌத்த மகாசபைக்கு ஆதரவளித்த இரண்டு ஆட்சியாளர்கள்,
(1) தர்மாஷோகன், அஜாஸத்த என்போராவர்.
(2) அஜாசத்த, காலாஷோகன் என்போராவர்.
(3) காலாஷோகன், கணிஷ்கன் என்போராவர்.
(4) காலாஷோகன் தர்மாஷோகன் என்போராவர்.

**34.** விபாஷா எனும் பெயருடன் வியாக்கியான (உரை) நூலை ஆக்கி அதனை செப்பேடுகளில் எழுதி கல்லான பேழையில் இட்டு ஸ்தூபமொன்றில் வைத்தது,
(1) இரண்டாம் பௌத்த மகாசபையின்போதாகும்.
(2) மூன்றாம் பௌத்த மகாசபையின்போதாகும்.
(3) அலுவிகார பௌத்த சபையின்போதாகும்.
(4) கணிஷ்க பௌத்த சபையின்போதாகும்.

**35.** "சிங்களவரே விழித்தெழுங்கள், புத்தகயாவைக் காப்பாற்றுங்கள்". எனும் கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுவது, அநாகரிக தர்மபாலா அவர்களிடமிருந்த,
(1) அடக்கத்தைக் காட்டுகின்றது.
(2) பயமின்மையைக் காட்டுகின்றது.
(3) அஹிம்சையைக் காட்டுகின்றது.
(4) கொள்கைகளை மதிக்கும் தன்மையை காட்டுகின்றது.

**36.** புத்தபகவான் தேவலோகத்திலிருந்து ஸங்கஸ்ஸபுரத்திற்கு எழுந்தருளுதலைக் குறிக்கும் சித்திரத்தைக் கொண்டுள்ள பொலனறுவைக் காலத்திற்குரியதான புனித ஸ்தானம் எது?
(1) ஹிந்தகல விகாரை (2) திம்புலாகல லென் விகாரை
(3) திவங்க பிலிம கெய (4) மெதவல விகாரை

**37.** இலங்கைக் கலைஞர்களின் கலைத் திறமையையும் தர்மத்தைப் பற்றி எடுத்துக் கூறக்கூடிய வல்லமையையும் வெளிப்படுத்தும் விலைமதிப்பற்ற கலைப்படைப்பு
(1) படிமாகர (2) சேதியகர
(3) போதிகர (4) சந்திரவட்டக்கல்

**38.** பல்லின, பல்சமய சமூகமொன்றினுள் மற்றைய சமயங்களையும் மதிப்பதுடன் சுய அடையாளத்தையும் நிலைநிறுத்தும் வகையில் வாழ்வது,
(1) இனப்பற்று ஆகும். (2) சமத்துவம் ஆகும்.
(3) சகவாழ்வு ஆகும். (4) ஸமஜீவிகதா ஆகும்.

**39.** பேராசையுடன் உணவு உண்ணும் ஐந்து வகை மனிதர்கள் பற்றி பௌத்த இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இவர்களுள் உண்ட உணவை வாந்தி எடுத்து அதனை மீண்டும் உண்பவர்,
(1) ஆகார ஹத்தக என்பவராவார். (2) அலங்ஸாடக என்பவராவார்.
(3) தத்தாவட்டக என்பவராவார். (4) புத்தவமித்தக என்பவராவார்.

**40.** பரலோகம் (வேறு உலகம்) இல்லை எனும் கொள்கையின் அடிப்படையில் இவ்வுலகில் இயலுமான அளவு சுகங்களை அனுபவிக்கும் ஆசை,
(1) காம தண்ஹா எனப்படும். (2) பவ தண்ஹா எனப்படும்.
(3) விபவ தண்ஹா எனப்படும். (4) ரஸ தண்ஹா எனப்படும்.

* *

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**11 | T | I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

බුද්ධ ධර්මය **I, II**
**பௌத்தம் I, II**
Buddhism **I, II**

## பௌத்தம் II

* **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** (i) 'அங்குலிமால தமன'வின் மூலம் வெளிப்படுத்தப்படும் புத்த குண இயல்பினை எழுதுக..

(ii) புத்தமதம் போதிக்கும் பிரதான பாவனா (தியான) முறைகள் **இரண்டினைப்** பெயரிடுக.

(iii) 'அனவஜ்ஜ சுகம்' என்பதன் அர்த்தத்தினைச் சுருக்கமாக குறிப்பிடுக.

(iv) புத்தர் பாத்திரத்தின் மூலம் 'தாதீ குணம்' வெளிப்படுத்தப்படும் **இரண்டு** சந்தர்ப்பங்களை எழுதுக.

(v) "யே தம்மா ஹேதுப்பபவா - தேச ங் ஹேதுங் ததா கதோ ஆஹ" இந்த அடியின் கருத்தினை எழுதுக.

(vi) நான்கு பிரஹ்ம விஹாரணங்களைப் பெயரிடுக.

(vii) குருணாகல் இலக்கிய யுகத்தைச் சார்ந்த பௌத்த இலக்கிய ஆக்கங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(viii) 'புஸ்தகாரூட ஸங்கீதி'யின் விளைவுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ix) அனுராதபுர காலத்திற்குரிய அபயகிரி ஸ்தூபத்தினையும் ஜேதவன ஸ்தூபத்தினையும் கட்டுவித்த ஆட்சியாளர்கள் **இருவரினதும்** பெயர்களைத் தருக.

(x) புத்தமதம் போதிக்கும், உள்ளத்தை மாசுபடுத்தும் தீய மூலங்கள் **மூன்றினைப்** பெயரிடுக.

**2.** (i) 'தச பாரமிதா'க்களுள் **இரண்டினைப்** பெயரிடுக.

(ii) மேலே (i) இல் பெயரிட்ட ஒரு பாரமிதாவினை விளக்குக.

(iii) தார்மீகம், நட்புடைமை, போதிசத்துவம் ஆகியவற்றிற்கு மாதிரியாயுள்ள சமூகமொன்றை ஏற்படுத்துவதற்கு பாரமிதா தர்மங்கள் உதவும் வகையினை தெளிவுபடுத்துக.

**3.** (i) "அத்தனாவ கதங் பாபங் - அத்தனா ஸங்கிலிஸ்ஸதி" எனும் தர்மபத செய்யுளைப் பூரணப்படுத்தி எழுதுக.

(ii) அந்த செய்யுளின் கருத்தினை எழுதுக.

(iii) சீடர் வாழ்வினைப் பயனுடையதாக்கும் வகையில் தம்மபதத்தில் வரும் உபதேசங்களை மதிப்பீடு செய்க.

**4.** (i) நான்கு சீரிய உண்மைகளுள் **இரண்டினைப்** பெயரிடுக.

(ii) மேலே (i) இல் பெயரிட்டவற்றுள் **ஒன்றை** விளக்குக.

(iii) நாளாந்த வாழ்வில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நான்கு சீரிய உண்மைகளை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதனை விளக்குக.

[பக். 7 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**5.** (i) புத்தர் சிலைகளை அவற்றின் அங்க நிலைப்பாடுகளின் அடிப்படையில் பிரித்துக் காட்டும் பிரதானமான **மூன்று** வகைகளைப் பெயரிடுக.

(ii) மேலே (i) இல் பெயரிட்டவற்றுள் ஒரு சிலை வகையினை உதாரணங்களுடன் விளக்குக.

(iii) இலங்கைச் சிற்பிகளின் (கலைஞர்களின்) கலைத்திறமை, புத்தசிலைவடிப்பின் மூலம் வெளிப்படுத்தப்படும் வகையினை தெளிவுபடுத்துக.

**6.** (i) முதலாவது பௌத்த மகாசபையை நடாத்துவதற்கு ஏதுவாயமைந்த காரணங்கள் யாவை?

(ii) அந்த பௌத்த மகாசபை நடந்த இடம், அதற்கு ஆதரவளித்த அரச ஆட்சியாளர், தலைமைத்துவத்தை ஏற்றுச் செயற்பட்ட அரஹத்தர் ஆகியவற்றைப் பெயரிடுக.

(iii) தர்மம், வினயம் ஆகிய இரண்டினையும் பாதுகாப்பதற்கு இந்த முதலாவது பௌத்த மகாசபையின் போது எடுக்கப்பட்ட முறையான நடவடிக்கைகளை விளக்குக.

**7.** பின்வரும் தலைப்புக்களுள் **இரண்டிற்குச்** சிறு குறிப்பெழுதுக.

(i) துட்டகைமுனு மஹாராஜா

(ii) உட்டான ஸம்பதா

(iii) த்ரிலக்ஷணம்

(iv) வட்டதாகெ

※ ※ ※

Department of Examinations Sri Lanka